<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.</u>

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 9/2021 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | வசந்தி | நாள் | 01.04.2025 |
| கணவர் பெயர் | மகேந்திரன் | | |

**<u>1 முதல் 4 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–</u>**

8) என் மாமனார் மாதையன் என்ன வேலை செய்கிறார் என்றால், விவசாயம் செய்து வருகிறார். மேலும் செங்கல் சூளை வைத்துள்ளார். என் மாமனார் ஆர்.கே.ஜீவல்லர்ஸ் நகை கடையில் மேலாளராக பணியாற்றினார் என்றால், அவரது சிறு வயதில் வேலை செய்தார். நான் சொல்வது தவறானது என்றாலும், 2017ம் வருடம் வரை ஆர்.கே.ஜீவல்லர்ஸ் கடையில் தான் மேலாளராக பணியாற்றி வந்தார் என்றால், சரியல்ல.

9) தற்போது என் மாமனார் நல்ல உடல் நிலையில் இல்லை என்றாலும், அவருக்கு சிறுநீரகத்தில் பிரச்சனை ஏற்பட்டு, தற்போது சிகிச்சையில் உள்ளார் என்றாலும், சரியல்ல. அவர் நல்ல உடல் நிலையில் தான் உள்ளார். நான் என் மாமனாரை கடைசியாக எப்போது பார்த்தேன் என்றால், கடந்த மாதம் 21ம் தேதி பார்த்தேன். அவரை நான் பார்த்தபோது அவரிடம் பேசினேனா என்றால், இல்லை. எனக்கு திருமணம் ஆனதிலிருந்து என் மாமனாரிடம் நான் பேசுவதில்லை என்றால், சரியல்ல. அப்போது எங்களுக்குள் சுமூகமான உறவு நிலை இருந்தது. நான் சொல்வது தவறானது என்றாலும், எப்போதும் நான் ஆடம்பரமாக வாழ வேண்டும் என நினைத்து செயல்பட்டதால், எனக்கும், என் மாமனாருக்கும் இடையே தொடக்கத்திலிருந்தே பிரச்சனை ஏற்பட்டு வந்தது என்றாலும், அதனால் எங்களுக்குள் எப்போதும் ஒரு சுமூகமான குடும்ப உறவு இருந்ததில்லை என்றாலும், சரியல்ல.

10) என் கணவர் பெயரில் நான் இதுவரை எவ்வளவு புகார்களை காவல் நிலையத்தில் அளித்துள்ளேன் என்றால், அவ்வாறு எந்த புகாரும் நான் அளித்ததில்லை. என் கணவரிடம் நான் அடிக்கடி பிரச்சனை செய்து, எங்களுக்குள் அடிக்கடி குடும்ப

பிரச்சனை ஏற்பட்டதால்தான் என் கணவர் கடந்த 21.08.2012ம் தேதியில் மனஉளைச்சலால் தற்கொலை செய்து கொண்டார் என்றால், சரியல்ல. அது முற்றிலும் தவறானது.

11) என் கணவர் தற்கொலை செய்து கொண்டது குறித்து, காவல் நிலையத்தில் வழக்கு பதியப்பட்டது என்றால், சரிதான். ஆனால், அதை நான் கொடுக்கவில்லை. மேற்படி என் கணவர் தற்கொலை செய்துகொண்டு இறந்துவிட்டது குறித்தும், மேற்படி சம்பவம் தொடர்பாக காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டது குறித்தும் என் வழக்கிலும், என் முதல் விசாரணை சாட்சியத்திலும் நான் சொல்லவில்லை என்றால், அது குறித்து தற்போது எனக்கு நினைவில்லை. நான் என் கணவருடன் பிரச்சனை செய்து, அதனால் ஏற்பட்ட மன உளைச்சலால் தான் என் கணவர் தற்கொலை செய்து கொண்டார் என்ற விவரம் தெரியவரும் பட்சத்தில் அது எனக்கு வழக்கில் பாதகமாக அமைந்துவிடும் என்பதால்தான் குறிப்பாக மேற்படி சங்கதிகளை என் வழக்கில் சொல்லாமல் நான் தவிர்த்துவிட்டேன் என்றால், சரியல்ல.

12) இவ்வழக்கில் பிரதிவாதிகள் என்ன பதிலுரை தாக்கல் செய்துள்ளனர் என்பதை நான் தெரிந்துகொண்டேனா என்றால், இல்லை. தாவா சொத்து பொன்னுசாமி கவுண்டருக்கு பாத்தியப்பட்ட சொத்து என நான் சொல்லியுள்ள நிலையில், அது குறித்து ஆவணங்கள் எதையேனும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், மேற்படி ஆவணங்கள் எதுவும் என் வசம் இல்லை. நான் சொல்வது போல் மேற்படி பொன்னுசாமி கவுண்டருக்கு சொத்துக்கள் எதுவும் இல்லை என்றாலும், தாவா சொத்துக்கள் 1ம் பிரதிவாதிக்கு கடந்த 13.05.1996ம் தேதிய கிரய ஆவணப்படி சுயார்ஜிதமாக பாத்தியப்பட்டவை என்றாலும், சரியல்ல.

13) ச.எண்கள்.570/3B, 570/4B ஆகியவற்றிலுள்ள நிலங்கள் 07.02.2003ம் தேதியில் 2ம் பிரதிவாதி பாப்பாத்தியால் கிரயம் பெறப்பட்ட நிலங்கள் என்றால், சரியல்ல. மேற்படி தாவா சொத்துக்களை பொறுத்து 1, 2 பிரதிவாதிகளின் பேரிலுள்ள கிரய ஆவணங்களை அனுசரித்து, அவரவர்கள் பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றாலும், நான்

சொல்வது போல் மேற்படி சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள் அல்ல என்றாலும், சரியல்ல.

14) நானோ, என் கணவரோ எந்த காலகட்டத்திலும் தாவா சொத்துக்களில் கூட்டாக அனுபவத்தில் இருந்ததில்லை என்றால், சரியல்ல. நாங்கள் கூட்டு சுவாதீனத்தில்தான் இருந்தோம். தாவா சொத்துக்கள் 1, 2 பிரதிவாதிகளின் சுயார்ஜித சொத்துக்கள் என்றாலும், மேற்படி சொத்துக்களை பொறுத்து ஒருபோதும் எனக்கோ, என் கணவருக்கோ வாரிசு உரிமைப்படி உரிமை ஏற்படாது என்றாலும், சரியல்ல.

15) என் கணவர் இறந்த பிறகு 1ம் பிரதிவாதி என் குழந்தைகளை அவரே பராமரித்துக்கொள்வதாக சொன்னபோதிலும், நான் தான் தன்னிச்சையாக அவர்களை விட்டு சென்றுவிட்டேன் என்றால், சரியல்ல. என் கணவரின் இறப்பு பணபலன்களில் 2ம் பிரதிவாதிக்கும் ஒரு பங்கு அளிக்கப்பட்டது என்றால், சரிதான். அவ்வாறு 2ம் பிரதிவாதிக்கு வழங்கப்பட்ட பணபலனை கூட அவர் என் மைனர் குழந்தைகளான 2, 3 வாதிகளுக்கே கொடுத்துவிட்டார் என்றால், சரியல்ல.

16) என் கணவர் இறந்ததற்கு பின்னிட்டு தான் எனக்கு தஞ்சாவூரில் அரசு தொழில்நுட்ப கல்லூரியில் வேலை கிடைத்தது என்றால், சரிதான். அவ்வாறு வேலைக்கு செல்லும் பொழுது என் மைனர் குழந்தைகளை என் பெற்றோரது பராமரிப்பில் விட்டு சென்றேன் என்றால், என் மாமனார், மாமியார் பராமரிக்க மறுத்துவிட்டதால், விட்டு சென்றேன். நான் சொல்வது தவறானது என்றாலும், என் மாமனாரும், மாமியாரும் மேற்படி என் மைனர் குழந்தைகளை பராமரிக்க எப்போதும் விருப்பத்துடன் இருந்தனர் என்றாலும், நான் தான் வேண்டுமென்றே அவர்களிடம் குழந்தைகளை அனுப்பாமல் இருந்துவந்தேன் என்றாலும், சரியல்ல.

17) பிரதிவாதிகளுக்கு மனஉளைச்சல் ஏற்படுத்தவேண்டும் என்ற எண்ணத்தில் தான் அவர்கள் மீது சேலம் மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளரிடம் புகார் அளித்தேன் என்றால், சரியல்ல. அவ்வாறு நான் எந்த புகாரும் கொடுக்கவில்லை. போலீசார்

விசாரித்தபோது தாவா சொத்துக்கள் 1, 2 பிரதிவாதிகளின் சுயார்ஜித சொத்துக்கள் என தெரியவந்ததால், அவர்கள் அறிவுரை கூறி அனுப்பிவிட்டனர் என்றால், சரியல்ல. கோவியட் பெருந்தொற்று காலத்தில் 1ம் பிரதிவாதி தனது பழுதடைந்த வீட்டை மாற்றி கட்ட வேண்டும் என்பதற்காக அரசு மானியத்தில் மேற்படி கட்டுமான பணிகளை செய்துள்ளார் என்றால், சரியல்ல. தன் சொத்தை விற்று தான் மேற்படி வீட்டை கட்டியுள்ளார். நான் சொல்வது தவறானது என்றாலும், 1ம் பிரதிவாதி அரசு மானியத்தில் தான் மேற்படி வீட்டை கட்டியுள்ளார் என்றால் சரியல்ல.

18) தாவா சொத்து பிரச்சனை தொடர்பாக பஞ்சாயத்து பேசியதாக சொல்லும் நிலையில், எந்த தேதியில், யார் முன்னிலையில் நடந்தது என்றால், ஊர் கவுண்டர் ரங்கசாமி முன்னிலையில் நடந்தது. தேதி, மாதம் நினைவில்லை. 2013ம் வருடத்தில் நடந்தது. மேற்படி பஞ்சாயத்திலும் கூட பஞ்சாயத்தார் தாவா சொத்துக்கள் என் மாமனார், மாமியாரின் சுயார்ஜித சொத்துக்கள் என்றும், அதனால் அவர்கள் விருப்பப்பட்டால் தான் பாகம் கொடுக்க இயலும் எனவும் கூறி பஞ்சாயத்தார் ஒதுங்கி கொண்டார்கள் என்றால், சரியல்ல.

(1 முதல் 4 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.